பக்கங்கள் நான்கு விலை ரூபா 5 - 00

முரசொலி

முரசு 05 ஒலி 319 ஜேர்மனிய கார்த்திகை 12 (28 - 11 - 91) வியாழன்

வீறுமிகு உணர்ச்சி வெளிப்படும் வகையில்

நேற்று நிகழ்ந்தது தமிழர் படை அணி வகுப்பு! மக்கள் திரண்டு அளித்தனர் கௌரவம்!

ஊரடங்கு உத்தரவு யாழ் மாவட்டம் பூராவும் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் வீறுகொள் தமிழர் தளர்வரோ தம் வரலாறு காணா வகையில் மாவீரர் தேசிய திருநெல்வேலியில் மாவீரர் தேசிய மீளாவினை மேலும் மெருகூட்டும் விதத்தில் அணிவகுப்பு மரியாதை பாரெங்கும் பரவசத்தை ஏற்படுத்தியும் வகையில் நேற்றுப் பிற்பகல் திருநெல்வேலியில் மாவீரர் தேசிய மீளாவினை மேலும் மெருகூட்டும் விதத்தில் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.

இத்தேசிய மீளாவினை ஆரம்பித்தும் வகையில் தமிழீழ சுதந்திரத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் தமிழீழ மக்கள் அனைவரும் மேற்கொண்டனர் அணிவகுப்புமரியாதை உறுதி செய்தும் வகையில் நிகழ்ந்தது. தமிழன் மாட்சி விளம்பும் கம்பீரம் மிளிர்ந்தது. தமிழன் மாட்சி விளம்பும் தன்மையினதாக இவ் அணிவகுப்பினைக் கண்டுகளித்து நிறைந்திட இளைஞர், யுவதிகள், வயோதிபர், மூதாட்டியர், சிறுவர், சிறுமியர் என்று சகலருமே வீதி ஓரங்களில் திரண்டனர் பெருமிதத்தில் நிலைத்தனர்.

தந்தம் அன்றாடக் கருமங்களையும் மறந்து மக்கள் அணிவகுப்பிற்கு பெரு மதிப்பு அளித்தனை அவதானிக்க முடிந்தது.

அணிவகுப்பு மரியாதையை விடுதலைப்புலிகள் ... 04 ஆம் பக்கம் பார்க்க

ரயில் விபத்துக்களை தடுப்பதற்கு வேகத்தை குறைக்க நடவடிக்கை

ரயில் விபத்துக்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்துவருவதற்கு பழைய சிலிப்பர் கட்டைகளே காரணம் என ரயில்வேப்பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதனால் கடுகதி புகையிரதங்கள் உட்பட சகல ரயில்களையும் வேகம் குறைத்து ஓட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். பழைய சிலிப்பர் கட்டைகளை அகற்றி கொங்கிறீட் சிலிப்பர் கட்டைகளைப் பொருத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் சுமார் 2லட்சத்து 50 ஆயிரம் கொங்கிறீட் சிலிப்பர் கட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ள தாகவும் அவர் மேலும் சொன்னார்.

அலைகடலென மக்கள் திரண்டிருந்த மாவீரர் தேசிய விழாவில் மகேந்திரராஜாவின் எழுச்சியுரை

ஆபத்தை எதிர்கொண்டு வெற்றிச்சாதனை

படைத்து சரித்திரமானோர் மாவீரர்

"போர்க்களத்தில் உயிராபத்து உண்டு என்று தெரிந்த போதிலும், எங்களை அடக்கி, ஆளநினைக்கின்ற எதிரியைத் தீர்த்துக்கட்டவேதையே குறிக்கோளாகக் கொண்டு அத்திரமுயற்சியில் வெற்றிகண்டு வரலாறு படைத்தவர்களே மாவீரர் எனும் பெருமை பெற்றுள்ளனர்" என்று நேற்று காலை யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் எழுச்சிபொங்கத் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தின் முன் போரூகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா கூறினார். திரு. இளமாறன் தலைமையில் நடைபெற்ற தேசிய விழாவில் பேரூகையில் மேலும் அவர் சொன்னதாவது:-

விதியென்று ஒன்று உண்டு; அதனை யாரும் வெல்ல முடியாது என்ற எண்ணத்தில் இறந்தழிந்து போகின்ற சராசரி மனிதரிகளிடமிருந்து வேறுபட்டவர்களாக - உயர்ந்தவர்களாக மாவீரர்கள் காணப்படுகின்றார்கள். போர்க்களத்தில் ஆபத்து உண்டு அழிவு உண்டு என்று தெரிந்த போதிலும், எம்மை அடக்கி ஆள நினைக்கின்ற எதிரியைத் தோற்கடித்து வெற்றி கண்டு போராடி அவனை அழிக்கும் முயற்சியில் வெற்றி கண்டு மாவீரன் தானும் தன்னை அழித்துக்கொள்கின்றான் மண்ணுக்கு உரமாக எமது மாவீரனையும், எமது மண்ணையும் காப்பதற்காகத் தங்களது செந்நீரை இந்த மண்ணுக்கே உரமாக்குகின்றார்கள். தங்கள் உயிரினும் மேலான தமிழ் ஈழ மக்களின் உயிர்களை மதிக்கின்ற தன்மை மாவீரர்களைத்தவிர வேறு யாருக்கு வரும்? ஒரு சராசரி மனிதன் இறந்து — 04 ஆம் பக்கம் பார்க்க

இராணுவ நடவடிக்கையே தீர்வு என்கிறார் ஜெயதிலக்க

இனப்பிரச்சினை தீர்வுக்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடாத்துவதை விட இராணுவ நடவடிக்கையே சிறந்த தீர்வு என்று இலங்கை சென்ற ஆய்வு நிலையப்பணிப்பாளர் தயான் ஜெயதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பாண் தட்டுப்பாடு

கொழும்பில் திடீரென பாணுக்கு பயந்த தட்டுப்பாடு நிலவுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன பாணுக்கு செயற்கைத்தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டமை பல கோடகளில் குறிவைத்த இலையில் இலவு விற்பனை யாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரம் தாக்குதல்

வீரமரணம்

ஆனையிறவு பகுதியில்

உண்டு அழிவு உண்டு என்று எமது மக்களையும், எமது

கண்டியில் பிரிட்டிஷ் கவுன்ஸில் விரைவில் மூடப்படவுள்ளது

கண்டியில் உள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் விரைவில் மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் உறவில் ஏற்பட்டுள்ள விரிசல் காரணமாகவே இது மூடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

— 04 ஆம் பக்கம் பார்க்க

இனப்பிரச்சினை தீர்வுக்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடாத்தக்கூடாது இராணுவ நடவடிக்கையே வேண்டும் என்

நோர் சொல்லை ஆய்வு நிலையப்பணிப்பாளர் தயான் ஜெயதிலக்க.

04 ஆம் பக்கம் பார்க்க

பிரதமருக்கு லலித் பாராட்டு

பிரதமரும், நிதியமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி.பி.விஜயதுங்காவை ஐ தே க. தலைமையாளர்

ஒழுங்கைச் சேர்ந்த லலித் அத்துலத்முதலி வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு காரைநகர் - சுழிபுரம் கடற்பரப்பில் நிலை கொண்டிருந்த கடற்படைக் கப்பலில் இருந்து

—04 ஆம் பக்கம் பார்க்க

வீரமரணம்

ஆனையிறவு பகுதியில் 21.07.91இல் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் காயமுற்று சிகிச்சை பெற்று வந்த கணேஷ் (சாம்

—04 ஆம் பக்கம் பார்க்க

மாவீரரின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர்

நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு மாவீரர்களின் பெற்றோர்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் அமைக்கப்பட்டி

ருந்த 800க்கு மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லத்தில்மாவீரர் சுடர் ஒளி ஏற்றப்பட்டது

...04 ஆம் பக்கம் பார்க்க

பெருந்தலைவன் பாசறையில் விடுதலைகானம்

இசைக்கும் குயில்கள் கவிஞர் வாஞ்சி உணர்ச்சியுரை

"பிரபாகரன் என்ற ஈடு இணையற்ற தலைவனின் பாசறையில் விடுதலைக் கான மிசைக்கும் குயில்கள் நாம்.

தமிழர் விடிவுக்காக ஆயிரமாயிரமாக மாத்திரமல்ல; இலட்சம் இலட்சமாகவும் மெழுகு வர்த்தியாகி எம்மையே தியா

கம் செய்யத் தயாராகிய நிலையில் உள்ளனர் நம் வீரர்'

இவ்வாறு மாவீரர் சிறப்பு நிகழ்ச்சியில் பேசுகையில் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சி நாதன் கூறினார்.

இந்நிகழ்ச்சி கந்தர் மடப் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து அதில் பேசுகையில் நாங்கள் உறுதி யையும், விடுதலை உணர்வையுமே இறு

தோம் 'தலைவன் போர்க்களம்பே என்றாக்போவோம் நிற்போம் என்றால் நிற்போம் எம்மை சேமிப்பே உறுதியும், விடுதலை உணர்வும் தான் நாம் இன்றிருப்போம் நாளை இருப்போம் என்பது கேள்விக் குறி காரணம் நாம் எரிய விரும்பும் மெழுகுதிரிகள் ஒவ்வொரு மாவீரர் நிகழ்விலும் உங்கள் விடுதலை கிடைக்கும் வரை உங்கள் விடுதலைக்காக ஆயிரமாயிரமாக அல்ல இலட்

—04 ஆம் பக்கம் பார்க்க

மாவீரர் மகத்துவம் பற்றி பாலகுமார் பெருமிதம்

மாவீரர்கள் என்று கூறும் போது ஈழத்தில் போராடிய அனைவர்களும் 'உன்னதங்கள் பற்றுவார்கள் 300க்கு மேற்பட்ட ஈரோஸ் போராளிகள்

மக்கள் மத்தியில் இணைந்து மாவீரர்களாகியது முக்கிய நிகழ்ச்சியாகும். இவ்வாறு புலிகளின் மூக்கெலிதர் திரு. பால

—04 ஆம் பக்கம் பார்க்க

மாலை கொடி இறக்கலுடன் மாவீரர் வாரம் நிறைவு

அடிமைத்தளை அறுத்து, சுதந்திரம் பெற்ற பூமியாகத் தமிழீழம் என்ற தீராத வேகத்துடன் செயற்பட்டு தம் இன்னுயிர் ஈந்த மாவீரர் வாரம் தொடர்பான இறுதி நாள் நிகழ்ச்சிகள் மாலை 5 05 மணிக்கு தேசியக் கொடி இறக்கத்துடன் உணர்வுமயமாக நிறைவுபெற்றது. நிர்வாகச் செயலகங்கள், தனியார் நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் உட்பட சகல இடங்களிலும்இவ்வாரம்நாளுக்குநாள் புதுவேகத்துடன் அனுஷ்டிக்கப்பட்டது. எனினும் தமிழ்கின்ற அந்தரப் பூக்கள்கூட சுதந்தம் இழந்து

— 04 ஆம் பக்கம் பார்க்க

இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள்

அதிக பாதுகாப்புக் கேட்கிறார்கள்!

இந்தியாவில் உள்ள பதினைந்து வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் தமக்கு அதிக பாதுகாப்பு வழங்கும்படி இந்திய அரசைக் கோரியுள்ளன.

மேலதிக பாதுகாப்பு வழங்கப்படாவிடில் தூதரகங்களை மூடிவிடுவது பற்றி ஆலோசிக்க வேண்டி வருமெனவும் குறிப்பிட்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியுள்ளனர்.

புதுடில்லியில் உள்ள ரூமேனிய தூதுவர் சீக்கிய தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனரையடுத்தே இந்த நிலை அக்கு தோன்றியுள்ளது.

'ஜே. ஆரை விட பிரேமா நீதியானவர், சிறந்தவர்'

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவை விட தற்போதைய ஜனாதிபதி பிரேமதாசா நீதியானவர், மனிதாபிமானமுடையவர், சிறந்தவர் என எதிர்க்கட்சி, சிறுபான்மை உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் பகிரங்கமாகப் பாராட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரான டீ. டபிள்யூ. இராஜரத்தினம் என்ற உறுப்பினரே ஜனாதிபதி பிரேமதாசாவைப் பாராட்டிய எதிர்க்கட்சி உறுப்பினராவார்.

நேற்று முன்தினம் இவர் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். சட்டத்தரணியான இவர் முன்னர் நீதிபதியாகவும் பணிபுரிந்தவர்.

ஜனாதிபதி பிரேமதாச, அரசுக்கு எதிரான தீர்ப்புக்களை வழங்கிய நீதிபதிகளுக்கும் நியாயமான முறையில் உதவியுயர்வு வழங்கியுள்ளார் எனத் தெரிவித்த அவர் ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் தர்மிஷ்ட ஆட்சிக்காலத்தில் தான் நீதிபதி பதவியுயர்விலிருந்து நீக்கப்பட்டதாகவும் அங்கு தெரிவித்தார்.

அமிர்தலிங்கம் கொலை வழக்கு நேற்றுக் கொழும்பில் ஆரம்பம்

அமிர்தலிங்கம் கொலை வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இக் கொலை வழக்கின் ஒரேயொரு எதிரியாக விடுதலை புலிகளின் இயக்கம் மரியதாஸ் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். கொலைக்குச் சதி செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நீதிபதி எச்.எம்.டி. ஜயசூரிய முன் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கொலைத் தடயங்களாக 16 பொருள்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இக் கொலை வழக்கில் எம். சிவசிதம்பரம், மாவை சேனாதிராஜா, பங்கையற்செல்வி, அமிர்தலிங்கம், சரோஜினி உட்பட இருபத்தியேழு பேர் சாட்சிகளாக அழைக்கப்படவுள்ளனர்.

பொலிஸ் நிலையம்

மட்டக்களப்புதிருகோணமலை புதிய பொலிஸ் நிலையமொன்று கடந்த 22 ஆம் திகதி முதல் இயங்கி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

கண்காட்சி

இன்று தெகிவளை மகாஜனாக் கல்லூரியில் நாவலர் நூல் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதில் நாவலரின் நூல்களும் நாவலரைப் பற்றிய நூல்களும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (22)

தமிழீழ காவல்துறை காவலர் பதவிக்கான விண்ணப்பம்

கீழ்க்காணும் தகைமையுடையவர்கள் தமிழீழ காவல் துறையின் காவலர் பதவிக்கான விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் 29 - 11 - 91 வெள்ளிக்கிழமை நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ காவல் துறையின் தலைமைக் காரியாலயத்திற்கு சமூகம் தரவும்

வயது:- 18 முதல் 30 வரை

கல்வித் தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)

உயரம்:- 5 அடி முதல் 6 அடி வரை

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

11063

சிறுவிளம்பரம்

சேதிடம்

உங்கள் சாதகங்கள் யந்திரங்கள் டிசம்பர் 1ஆம் திகதிக்கு முன் எடுத்துக் கொள்ளவும் டிசம்பர் 3 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை மூடியிருக்கும் ஸ்ரீமாலை ஸ்நாயக2 சோதிட நிலையம் 146, பருத்தித்துறை றோட், நல்லூர். 11067

ஜோதிடர்

உயர்தர நத்தார்-புதுவருட வாழ்த்துமடல் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. விபரம் கட்டு ரஞ்சிற் இல. 16 மாடியன் லேன், கொன்வென்ற் றோட், யாழ்ப்பாணம். 11064

யாழ்ப்பாண மாநகர சபை

கேள்வி அறிவித்தல் 1992

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை, நல்லூர் கடைகள், சந்தை கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01 01. 1992 முதல் குத்தகைக்குக் கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 13. 12 1991ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணையும் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 100/- உம் செலுத்துவதன் பேரில் 12.12.1991 ஆம்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணி வரையும் யாழ்ப்பாண மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் யாழ் பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ் பாண மாநகரசபை ஆணையாளருக்கு 13, 12, 1991 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

தபாலில் அனுப்பப்படும் பட்சத்தில் விநியோகத்தில் ஏற்படும் தாமதத்திற்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் நாளாந்த இறைவரிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
26-11-1991

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

அட்டவணை

குத்தகை விபரம்	குத்தகைக் காலம்	கேள்விப் பிணை	நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித்தொகை	மாத வாடகை
1. பெரிய கடை மரக்கறிச் சந்தை	1 வருடம்	5000-00	235530-00	
2. குருநகர் சந்தை	1 வருடம்	5000-00	375000-00	
3, செம்மணந்தா சந்தை	1 வருடம்	5000-00	275000 00	
4. நாவாந்துறை சந்தை	1 வருடம்	2500-00	1125000-00	
5. பாசையூர் சந்தை	1 வருடம்	2500 00	10000-00	
6. கொட்டடிச் சந்தை	1 வருடம்	2500 00	50000-00	
7. அரியாலைச் சந்தை	1 வருடம்	1000-00	15000-00	
8. கொழும்புத்துறை சந்தை	1 வருடம்	500-00	2500-00	
இறைச்சிக்கடைகள்				
கொட்டடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடைகள்				
கடை இல 1	1 வருடம்	2500/-	5000/-	123. 72
,, 2	1 வருடம்	2500/-	6000/-	112. 50
,, 3, 4, 6-11	1 வருடம்	2500/-	5000/-	112. 50
,, 5	1 வருடம்	2500/-	9500/-	112. 50
நாவாந்துறை மாட்டிறைச்சி கடைகள்				
கடை இல 1, 5, 7	1 வருடம்	2500/-	5000/-	200. 00
,, ,, 6	1 வருடம்	2500/-	9375/-	200. 00
ஆட்டிறைச்சிக் கடை				
கடை இல 8, 9	1 வருடம்	2500/-	5000/-	200. 00
நாவாந்துறை சந்தை கோழிக்கடை				
கடை இல 10	1 வருடம்	2500/-	5000/-	200. 00
குருநகர் சந்தை மாட்டிறைச்சி கடைகள்				
கடை இல 1, 2, 4, 6	1 வருடம்	2500/-	10000/-	195. 00
,, ,, 3	1 வருடம்	2500/-	15125/-	195. 00
குருநகர் சந்தை ஆட்டிறைச்சிக்கடைகள்				
கடை இல 7	1 வருடம்	2500/-	10000/-	195. 00
பாசையூர் சந்தை மாட்டிறைச்சிக்கடைகள்				
கடை இல 1	1 வருடம்	2500/-	21000/-	135. 00
,, ,, 3	1 வருடம்	2500/-	5750/-	135. 00

,, ,, 3	1 வருடம்	2500/-	5750/-	135. 00
நரிக்குண்டு மா. இ. ச.	1 வருடம்	2500/-	6000/-	123. 75
அரியாலை ,,	1 வருடம்	2500/-	9000/-	135. 00
அரியாலை ஆ ,, ,,	1 வருடம்	2500/-	5000/-	135. 00
செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை				
கடை இல 1	1 வருடம்	2500/-	5010/-	112. 50
,, ,, 2	1 வருடம்	2500/-	5000/-	112. 50
நல்லூர்க்கடைகள்				
கடை இல 1ஏ	5 வருடம்	2500/-	10000/-	59. 50
,, 1பி	5 வருடம்	2500/-	10000/-	59. 50
சந்திரச்சந்தைக்கடை				
கடை இல 64	5 வருடம்	2500/-	25000/-	168. 75

11068

யாழ் மட்டினத்தில், ஆஸ்பத்திரி வீதியில்

முரசொலி விளம்பர கருமபீடம்

இலங்கை வர்த்தக வங்கியின் யாழ் கிளைக்கு அருகிலும்
யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாகவும்,
484/1 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த

இலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெட் கட்டிடத்தின்
முதலாம் மாடியில்
முரசொலியில் பிரசுரித்தற்கான விளம்பரங்கள்
ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

சனி, ஞாயிறு தவிர்ந்த எல்லா நாட்களிலும்
காலை 9. 00 மணி தொடக்கம் மாலை 5. 00 மணி வரை
விளம்பரங்களைக் கையளிக்கலாம்.

பொது முகாமையாளர்
முரசொலி

A11053

அணிவகுப்பை பார்வையிட திரளான மக்கள்

மாவீரர் தினத்தின் ஆறாம் நாளான நேற்று இரவு மின் னொளியில் கலியங்காடு சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக இருபாலை சேதுபதி பிள்ளையார் கோயிலடி வரை தமிழீழ விடுதலைப் புலிகளினதும், தமிழீழ காவற் துறையினரினதும் அணி வகுப்பு 8-45க்கு ஆரம்பமாகி 9-30 மணி வரை நடைபெற்றது.

மழையையும் பொருட்படுத்தாது நீண்டநேரமாக பொறுமையுடன் இருமருங்கிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடிநின்று இதனைப் பார்வையிட்டனர். 02

மாவீரர் நினைவுப்போட்டி

கடற்புலிகளின் அனுசரணையுடன் பாஷையூர் செல் அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் மாவீரர்கள் நினைவாக நடத்தும் செற்றப் முறையான கரப்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் செல் அந்தனீஸ் விளையாட்டரங்கில் இடம் பெற்ற பொழுது வெளிச்சம் போதாமையால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

★ அண்மைய இராணுவ நடவடிக்கைகளின் விளைவு

யாழ், கீளி, முல்லை மாவட்டங்களில் மட்டும்

5000 விதவைகள்!

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தகவல்

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப் பாணம், கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மட்டும் 5000 க்கு மேற்பட்ட பெண்கள் விதவைகளாகியிருப்பதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் அதன் "தரிசனம்" இதழில் தெரிவித்துள்ளது.

இவ்விதவைப் பெண்களுக்கு தொழில் முயற்சிகளிலீடுபடுவதற்காக இம் மூன்று மாவட்டங்களிலும் ரூ. 790,666 செலவிடப்படடிருப்பதாகவும் அவ் இதழில் மேலும் குறிப்பிடப்படுகிறது.

வவுனியா, மன்னார், திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களையும் கணக்கிலெடுத்தால் இராணுவ நடவடிக்கைகளினால் விதவைகளான தமிழ்ப் பெண்களின் தொகை பன்மடங்கு அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப் பாணம், கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அகதிகளாகியுள்ள தமிழ் மக்கள் தங்குவதற்கு 10 கோடி செலவில் புதிய விடுதி

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு புதிய விடுதி ஒன்று கட்டப்படவுள்ளது.

சகல வசதிகளையும், பாதுகாப்பையும் கொண்டதாக இப் புதிய விடுதி அமைக்கப் படவுள்ளது.

இதன் கட்டிட வேலைகளுக்கென பத்துக் கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. விடுதியில் நவீன தளபாட வசதிகளும், அலங்காரங்களும் செய்யப்படும்.

சுதந்திரமாக செயற்பட லஞ்ச ஆணையாளருக்கு அனுமதி

லஞ்ச ஆணையாளரை சுதந்திரமாக செயற்பட வழிசெய்யும் வகையில் விரைவில் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது கணக்காளர் நாயகம், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் பிற தலையீடுகள் இன்றி சுயமாக இயங்குவதற்கு சட்டமூலம் பாதுகாப்பும், அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. இதேபோன்று எதிர்காலத்தில் அரசியல் தலையீடின்றி லஞ்சத் தினைக்களம் செயற்பட இத் திருத்தம் வழிசெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஓய்வூதியம்

அரச ஊழியர்கள் ஓய்வு பெற்ற ஒரு மாதகாலத்தினுள் அவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படுமென பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயத்தில் தாமதம் காட்டும் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும், இதற்கு ஏதுவாக ஒழுக்காற்று கோநூலில் திருத்தம் செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

சபரிமலை யாத்திரைக்கு பெண்களும் அனுமதி

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குப் பெண் பக்தர்களும் செல்லலாமென உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுவரை காலமும் ஆண்கள் மட்டுமே சபரிமலைக்கு பாதயாத்திரை செல்ல அனுமதிக்கப்பட்டு வந்தனர். (22)

தமிழ்மொழி மூல பாடநெறிக்கு 15-ம் திகதிவரை விண்ணப்பிக்கலாம்

மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ்மொழி மூலமான பாடநெறிகளைப் பயில்வதற்கான விண்ணப்பத் திகதி டிசம்பர் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய உயர்தரக் கணக்கியல் டிப்புலோமா (முழுப் பகுதி நேரம்) தேசிய கணக்கியல் தொழில் நுட்பவியலாளர் தேர்வு, சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகிய பாடநெறிகள் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ்மொழி மூலம் நடாத்தப்படவுள்ளன.

இது பற்றிய விவரங்கள் செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் வைத்து வழக்கறிஞர் கைது

வழக்கொன்றில் ஆஜராகி வாதாடிக்கொண்டிருந்த வழக்கறிஞர் ஒருவர் நீதிமன்றத்தில் வைத்தே கைது செய்யப் பட்டிருக்கிறார்.

சென்னை உயர் நீதிமன்றத்திலேயே இச்சம்பவம் நடந்துள்ளது. திராவிடர் கழக உறுப்பினரான வீரசேகரன் என்ற வழக்கறிஞரே கைது செய்யப்பட்டவராவார்.

நேடபேடுவோருக்கு உதவியதாக வீரசேகரன் மீது பயங்கரவாத ஒழிப்புச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

உதவி அரச அதிபர் பிரிவு தோறும் 3 மரண விசாரணை அதிகாரிகள்

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் தலா மூன்று நிரந்தர மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் பெரியபத்தினி ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நிரந்தர மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் இத் தகவலைத் தெரிவித்தார்.

நள்ளிரவு மணியோசையுடன் மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்பட்டது

நேற்று முன்தினம் மாவீரர் வாரம் 6 ஆம் நாள் நள்ளிரவு தாண்டும் நேரத்தை தமிழீழ மக்களனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். யாழ் குடாநாட்டு வீதியெங்கும் மக்கள் மயமாக இருந்தன.

தமிழீழ மண்ணுக்காய் மக்களுக்காய் இதுவரையில் வீரமரணமடைந்த 3500 க்கு மேற்பட்ட மாவீரர்களின் நினைவாக தமிழீழ மக்கள் சகல பகுதிகளிலும் மணியோசை ஒலித்திட சுடரொளி ஏற்றிட மாவீரர் நாள் உணர்ச்சிபூர்வமாக

ஆண் வியாபாரிகளுக்கு வவுனியாவில் கட்டுப்பாடு

வவுனியாவில் ஆண் வியாபாரிகள் பலத்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலேயே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியுமென அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" நோய்கள் வருமுன் காப்பதே சாலவும் நன்று. சில நோய்களின் அறிகுறி பற்றியும் அதற்கான காரணங்களையும், பரிகாரங்களையும் இக் கட்டுரையில் டொக்டர் எம்.கே.முருகானந்தன் விளக்குகிறார்.

அடிக்கடி ஏற்படும் சில நோய்களுக்குப் பரிகாரங்கள்

தலையிடி

தலையிடி என்பது ஒரு நோயல்ல; அது வேறு ஏதாவது நோயின் அறிகுறியாகவே இருக்கும். இளவயதில் ஏற்படும் பெரும்பாலான தலையிடிகள் பாரதூரமானவையல்ல.

நீண்ட நேரம் தொடர்ந்து படிப்பது, நித்திரையை அலட்சியம் செய்து படிப்பது, மங்கலான வெளிச்சத்தில் படிப்பது, ஆர்வமின்றிக் கட்டாயத்திற்காகப் படிப்பது போன்றவையும் தலையிடியை ஏற்படுத்தலாம்.

போதிய வெளிச்சமின்றிப் படிப்பதால் கண்களுக்குப் பழு அதிகமாகி, அதனால் தலையிடி ஏற்படலாம். எனவே பிரகாசமான வெளிச்சத்திலேயே படியுங்கள். படிப்பறையில் சாதாரண பல்புகளுக்குப் பதிலாக டியூப் லைட்டின் வெண்ணிற ஒளியில் படிப்பது நல்லது. பல்பின் ஒளி கண்களை நேரடியாக உறுத்தும் வகையில் அமைக்கப்படக் கூடாது. பல்பு தலைக்கு முன்புறமாகத் தொங்க விடக் கூடாது. தலைக்கு மேற்புறமோ, பின்புறமோ தான் இருக்க வேண்டும். மேசை விளக்காக இருந்தால் ஒளி உங்கள் கண்களை உறுத்தாது. நேரடியாகப் புத்தகத்தில் விழும்படி அமைக்கப்படவேண்டும்.

குறைந்தது ஏழு மணி நேரமாவது இரவில் தூங்குங்கள். நீண்டநேரம் தொடர்ந்து படிக்க வேண்டி நேர்ந்தால் இடையிடையே கண்களுக்கும், மூளைக்கும் ஓய்வு கொடுங்கள். உதாரணமாகச் சிறிது நேரம் படித்திருந்து ஓய்வெடுக்கலாம், ஆழமான சுவாசங்களை எடுக்கலாம். காதோரம் இடமான இடத்தில் உலாவலாம். அல்லது இலேசான உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

இவற்றை அவதானித்தும் உங்கள் தலையிடி குறைய விலையானால் வைத்திய ஆலோசனை பெறுங்கள். கண் பார்வைக்கோளாறு, பீனிசம் (Sinusitis), காய்ச்சல் போன்ற நோய்களும் காரணமாயிருக்கலாம். மிக அரிதாகவே மூளையோடு சம்பந்தப்பட்ட பாரதூரமான நோய்கள் காரணமாகின்றன.

மனவிளைவு (Stress), மனப்பதற்றம் (Anxiety), ஹிஸ்டீரியா (Hysteria), பசி, மாதவிடாய், பல் நோய்கள் போன்றவையும் தலையிடிக்குக் காரணமாகலாம்.

கண்ணுத்து

கண்ணுத்தும், தலையிடியும் பொதுவாகச் சேர்ந்தே வருபவை. தலையிடிக்குக் காரணமாகக் கூறியவையே பெரும்பாலும் கண்ணுத்துக்கும் பொருந்தும். சில வேளைகளில் கண் நோய்களும் காரணமாகலாம். எனவே தலையிடிக்குக் கூறிய முறைகளையே இங்கும் அனுசரித்துப் பார்க்கவும். அல்லது கண் வைத்தியரை அணுகுங்கள்.

நெஞ்சு நோ

மாணவர்களான உங்களுக்கு ஏற்படும் நெஞ்சு நோ அல்லது நெஞ்சுவலி ஆகியன பெரும்பாலும் ஆபத்தான நோய்களின் அறிகுறிகளாக இருப்பதில்லை. மாரடைப்பு (Heart Attack) இளவயதில் உண்டாவதில்லை. ஏனைய இருதய நோய்களும், நுரையீரல் நோய்களும் மாணவப் பருவத்தில் ஏற்படுவது அரிது.

உங்கள் நெஞ்சு நோக்கள் பெரும்பாலும் தசை, சவ்வு, எலும்பு ஆகியவற்றில் உண்டாகும் அழற்சியினாலேயே உண்டாகின்றன. உதாரணமாக கோக்டோ கொன்ரைட்டிஸ் (Costo Chondritis) என்ற நோயைக் குறிப்பிடலாம். மார்பு எலும்பில் உள்ள சவ்வுகளில் ஏற்படும் அழற்சியாலேயே உண்டாகிறது. இது ஆபத்தானது அல்ல. சில தினங்கள் ஒய்வுடன் பனடோல், டிஸ்பிரின் போன்ற வலி நிவாரணிகளை உபயோகிப்பதால் மாற்றிவிடலாம்.

சில வேளைகளில் மனப் பதற்றம், ஹிஸ்டீரியா போன்ற மனோவியல் காரணங்களாலும் ஏற்படலாம்.

வயிற்று நோ, எரிவு

பெரும்பாலான மாணவர்கள் அதிகாலையில் எழுந்து எதுவும் சாப்பிடாமலேயே ரியூசனுக்கும், அதன் பின் பாட

வவுனியாவில் ஆண் வியாபாரிகள் பலத்த கட்டுப்பாட்டுக்கும் சோதனைக்கும் உள்ளாகியே பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு 2½ மணித்தியாலங்களுக்கும் 20 பேர் கொண்ட ஒரு தொகுதி வியாபாரிகள் உள்ளே சென்று வந்ததன் பின்பே அடுத்த தொகுதியினர் அனுமதிக்கப் படுகிறார்கள்.

ஆண் வியாபாரிகள் கடுமையான சோதனைக்கு உள்ளாகும் அதே நேரம் பெண் வியாபாரிகள் இலகுவாகப் பொருள்களைக் கொண்டு வருகிறார்கள் என அங்கு

உறுப்பினர்களின் 'சாகசங்களை' நேரில் பார்க்க சந்தர்ப்பம்!

இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளினதும் கேள்வி நேர நடவடிக்கைகள் 'தூரதர்சன்' தொலைக்காட்சியில் இனிமேல் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளன. இதற்கான அனுமதியை லோக்சபா, ராஜிய சபா பொதுநோக்குக் குழு வழங்கியுள்ளது.

இதனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆக்ரோசமான வாதங்களையும், சில நடவடிக்கைகளில் அவர்களின் அடிபிடி 'சாகசங்களையும்' நேரில்கண்டுகளிக்கும் வாய்ப்பு இந்திய வாக்காளர்களுக்குக் கிடைக்கவுள்ளது.

எனினும் ஆரம்பத்தில் பரீட்சார்த்தமாகவே இந்நேரடி ஒளிபரப்பு நடாத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரச ஊழியர் விவரம் 'புள்ளியியலில்' வெளிவரும்

அரச சபைகள், கூட்டுத் தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் பற்றிய விவரங்கள் குடிசன மதிப்பு, புள்ளியியல் தினைக்களத்தினால் கணக்கெடுப்புச் செய்யப்படுகின்றது

இக்கணக்கெடுப்பிற்காக ஊழியர் தொகை, வகிக்கும் பதவிகள் பற்றிய புள்ளி விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு இத்தினைக்களம் சகல அரச சபைகள், கூட்டுத் தாபனங்களைக் கோரியுள்ளது.

திரட்டப்படும் இவ்விவரங்கள் குடிசன மதிப்பு, புள்ளியியல் தினைக்களத்தினால் வருடாந்த வெளியீடான 'புள்ளியியல்' பிரசுரத்தில் வெளியிடப்படும். (14)

மக்கள் பயமாக இருந்தன.

இன்டர்போலின் உதவியை இந்தியா நாடுகிறது

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய பொலிஸார் 'இன்டர் போல்' சர்வதேசப் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளதாகப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தாய்லாந்தே தற்போது நிலையமாக உள்ளதாகவும், அங்கிருந்து கே. ரி எனற ஏஜென்சி ஒன்றின் மூலம் புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்

போசை ஒலித்திட சுடரொளி ஏற்றிட மாவீரர் நாள் உணர்ச்சி பூர்வமாக ஆரம்பமாகியது. யாழ்குடா எங்கும் ஒளிவெள்ளத்தால் காட்சி தந்தன

பாடசாலைகள், மாதர் சங்கங்கள், அரச நிறைகளங்கள், தனியார் கல்வி நிலையங்கள், ஆலயங்கள், தேவாலயங்கள், சனசமூக நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் என்ற வேறுபாடின்றி இந்நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (07.90)

ஜனாதிபதி வவுனியா வருகிறார்

ஜனாதிபதி பிரேமதாசா எதிர்வரும் ஏழாம் திகதி சனிக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்வரவுள்ளார்.

வவுனியாவில் ஜனாதிபதி தலைமையில் உயர் மட்ட மகாநாடு ஒன்றும் நடைபெறும்.

வயிற்றோ நோய், சாவு

பெரும்பாலான மாணவர்கள் அதிகாலையில் எழுந்து எதுவும் சாப்பிடாமலேயே ரியூசனுக்கும், அதன் பின் பாடசாலைக்கும் சென்று விடுகிறார்கள். இதனால் இரவுப்பை நீண்ட நேரம் வெறுமையாக இருக்கிறது. அங்கு அமிலம் அதிகம் சுரப்பதால் குடற் புண்கள் ஏற்படலாம். குடற்புண்களால் வயிற்றில் எரிவு, புகைவு, நெஞ்சரிப்பு, வயிற்றுமுட்டி, உணவு ஜீரணமடையாமை போன்ற அறிகுறிகள் உண்டாகலாம்.

இவற்றைத் தவிர்க்க நேரந் தவறாமல் உணவு உட்கொள்ளுங்கள். கடுமையான காரம், அதிகமான வாசனைச் சரக்குகள் ஆகியவற்றைத் தவிருங்கள். போதியளவு நித்திரை கொள்ளுங்கள் வீண் கவலைகளை நீக்குங்கள் பால் அருந்துங்கள். எலுமிச்சம் சாறு, அன்னாசி ஆகியவற்றைத் தவிருங்கள்.

அலுரொக்சி (Aludrox), அக்ரால் (Actal) போன்ற அமில எதிர்ப்பு மாத்திரைகளை வைத்திய ஆலோசனையுடன் உபயோகிக்கலாம்.

வயிற்றுக் குத்து

வயிற்றுக் குத்து பல காரணங்களால் ஏற்படலாம். உணவு ஜீரணமடையாமை கூட ஒரு காரணமாகலாம்.

அப்பென்டிசைடிசி (Appendicities) அதிகம் ஏற்படுவதிலையானாலும் மனதில் இருக்க வேண்டிய ஒரு நோய். ஏனெனில் இந்நோய்க்கு உடனடியாகச் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். இல்லையேல் அழற்சியுற்ற குடல்வளரி வயிற்றுக்குள்ளேயே வெடித்து ஆபத்தை உண்டாக்கலாம். இந்நோயில் வயிற்றுக் குத்து, பொருமலைச் சுற்றி ஆரம்பித்து பின் வலப்புற அடி வயிற்றில் நிலை கொள்ளும்.

சிறுநீர்க் குழாய்களில் 'கல் அடைசலால்' ஏற்படும் குத்து ரீனல் கொலிக் (Renal Colic) எனப்படும். சிறுநீர்க் கழிப்பு றைந்துச் செல்ல வெட்கப்பட்டு, போதிய நீர் அருந்தாது வரட்சியுடன் இருப்பவர்களுக்கு இது தோன்றலாம். இக்குத்து எந்தப் பக்கத்திலும் ஏற்படலாம். நாரியில் இருந்து வயிற்றுக்கோ, வயிற்றிலிருந்து சலவாயிலுக்கோ செல்வது போல இக்குத்து தோன்றலாம். சல எரிவும் கூட ஏற்படும். எனவே நிறைய நீர் அருந்துங்கள்.

(வளரும்)

தேசிய விழாவில் யோகி பேச்சு

ஒழுக்கம், கட்டுப்பாடு, திறமை, நிறைந்த புனித போராட்டம்!

"எமது விடுதலைப் போராட்டத்தில் திறமை, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு மத்தியிலேயே, சிறப்பான அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது" என்று மாவீரர் தேசிய விழாவில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிச் செயலதிபர் நிருபர் யோகரட்ணம் யோகி பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:-

"படைத்துறைப் பயிற்சி பள்ளி மாணவர்களுக்காக மிக இளைய வயதினருக்காக உருவாக்கப்பட்டது. பதினான்கு வயதுக்குட்பட்ட போராளிகளை ஒன்று சேர்த்து அவர்கள் படிக்கின்றார்கள்.

புதிய சமுதாயம்

பாடசாலையின் நோக்கம் நாம் விரும்பியபடி டிக்கள் விரும்பியபடி புதிய சமுதாயத்தை உருவாக்குவதே எமது இயக்கத்தில் எப்படி ஒழுக்கம் கட்டுப்பாடு வேண்டுமோ அதேபோல பாடசாலையில் இவ் இரண்டும் வேண்டப்படுகிறது.

இன்று நாம் மகளிர் படைப் பிரிவில் சிற புலிப்படையான அதிரடிப் படையினையும் உருவாக்கியுள்ளோம் திறமை ஒழுக்கம் கட்டுப்பாடு இவற்றுக்கு மத்தியிலேயே போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது-

உணவுத் தேவை

மக்களுக்கு 9000 மெற்றிக் தொன் உணவு தேவை இங்கு அனுப்பி வைக்கப்படுவது ஆயிரம் மெற்றிக் தொன் தானும். அரசு தமிழ் மக்கள் மீது உணவு நெருக்கடியினை ஏற்படுத்தி தமிழீழப்போராட்டத்தை முறியடிக்கலாம் என்று கருதுகிறது நாம் இதற்கு அஞ்சாமல் ஏதோ ஒரு வகையில் வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும். இங்குள்ள உற்பத்திப் பொருள் உண்ண வேண்டிய நிலை உருவாகியுள்ளது. பல நடைமுறைப் பிரச்சினைகள் வரலாம்.

இந்த மண்ணிலே நாம் போராட்டம் நடாத்து இறோம் எங்களுக்குரிய வசதிகளை இங்குள்ளவைகளுக்கு ஏற்ப சரி வெளிநாட்டிற்கு சென்றவர்களும் சரி தரவேண்டும்.

மாவீரர்கள் தினவு கூரப்படவேண்டியவர்கள் பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாலும் சாதிப் பிரச்சினைக்கு அப்பாலும் நின்று இந்த மண்ணை மீட்கப் போராடினார்கள் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அறியாமை நீக்கப்பட வேண்டும் இவற்றிற்கு அப்பால் நின்றே நாம் போராட்டத்தினை நடாத்துகிறோம்

வரலாற்று துரோகத்தினை நாம் ஒரு போதும் செய்யமாட்டோம் மாவீரர்களின் கனவுகளை நாம் நிறைவேற்றியே தீருவோம் என்றார் அவர்.

மாமியார் மீதான வெறுப்பு அதே தோற்றம் கொண்ட அறுவரைக் கொன்ற நபர்

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒருவர் ஆறு பெண்களை கொலை செய்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கொலை செய்த பெண்கள் எல்லோரும் 60 வயதுக்கும் 92 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர் எனத்தெரிவிக்கப்படுகின்றது. பொலிசார் இவரை கொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்த பொழுது தன் வெறுப்புக்குள்ளான மாமியாரின் தோற்றத்தில் அந்த ஆறு பேரும் இருந்தாக கொலையாளி கூறியதாக அறிவிக்கப்படுகின்றது

விசேட தளபதி தமிழ்ச்செல்வன்

"மாவீரர் நாள் தமிழீழத்தில் மிகமுக்கிய தொரு நாளாகும் வரலாற்றிலே மிக முதன்மை பெற்ற நாள் மாவீரர் நாளாகும் மனதிலே உணர்ச்சி அலைகளை எழுப்பிக் கொண்டாகும் போராளிகளின் கனவுகள், ஆசைகள் உள்ளங்களில் திறந்திருக்கும் போராட்டத்தில் துன்பத்தையும், துயரத்தையும்சந்தித்துஇன்று வரையில் 3500 மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்த மாவீரர்களாகிய நாளாகும்" என்று யாழ் மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச் செல்வன் தனது உரையில் கூறினார்.

போராளிகள், மாவீரர்கள் ஒன்றாகப் பின்னிப் பிணைந்தவர்கள் பாசத்துடன் நேசித்தவர்கள் கூட இருந்தவர்கள் இன்று இருக்கும் போராளிகளுடன் மாவீரர் நாளை இகலை" போராளிகளின் உள்ளங்கள் மிகத் தூய்மையானது இப்போது உணர் வேகங்கள் மத்தியில் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லமுடிகிறது என்றும் அவர் சொன்னார் 07

ஆபத்தை .....

விட்டாலென்றால் அதனை யிட்டு நாம் அலட்டிக்கொள்வதில்லை. ஒரு போராளி மாவீரனாகி விட்டால் என்றால் அது சரித்திரமாக மாறி விடுகின்றது.

மனவலிமை

அடக்குமுறைக்கெதிரான போராட்டத்தை நாம் ஆரம்பித்தபோது எம்மிடம் அதிகளவு ஆயுதங்கள் இருந்ததில்லை. வேற்று நாட்டவர்களும் எமது போராட்டத்தை ஆதரித்து எமக்கு ஆயுதங்களை வழங்க முன்வரவில்லை. எம்மிடம் இருந்தது தொலாம் எமது மனவலிமை மாத்திரமே! இன்றைய எமது போராட்ட வளர்ச்சிக் காரணமாக அமைந்தவர்கள், எமக்கு எதிராக எமது ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியஉள் நாட்டுத் தீய சக்திகளும், ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகளுமே! அத்துடன் எமது மாவீரர்களின் இலாகமும் அடிக்கற்களாகவும். படிக்கற்களாகவும் அமைந்து விட்டன.

இந்திய இராணுவம் ஒப்பந்தம் ஒன்றை முன்வைத்து இலங்கைக்கு வந்தது இவர்களோடு எம்மால் போராட முடியுமா? என்று யாரும் பலவாறாகப் பேசினர். இலீமன், குமரப்பா, புலேந்திரன் போன்ற மாவீரர்களது திடமான மன உறுதியுமிக்க நடவடிக்கைகள் காரணமாகத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அசைவாத உறுதி காரணமாக அந்த வல்லரசு இராணுவத்தையும்

ஜே.வி.பி. நடவடிக்கை தீவிரம் அரசுக்குதொடர்ந்துநெருக்கடி

ஸ்ரீலங்கா அரசு ஜே.வி.பி.யின் தெடுபிடிகளாக் தொடர்ந்து நெருக்கடிலய எதிர் நோக்கிவருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வியக்கத்தின் தொடர் புள்ளவர்கள் எனக் கருதப்பட்டும் பொலிசாரால் கைதானோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அறியவருகின்றது

தேடப்பியின் முக்கிய தலைவர்கள் எனக்கருதப் படும் மூன்று நபர்கள் எல்லிபிட்டியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று நபர்களும் மினிபஸ் போக்குவரத்துச் சேவை நடாத்தியவர்கள் என்றும் ஒருவர் பஸ் உரிமையாளர் என்றும் மற்ற இருவரும் சாரதியும் நடத்துநரும் என்றும் தெரியவருகிறது. இவர்களிடமிருந்து பெருமளவு வெடிமருந்தும் கைப்பற்றப்பட்டன

வவுனியா மாவட்டத்தில்

ஆசிரியர், எழுதுவினைஞர் பதவிகளுக்கு வெற்றிடங்கள்

வவுனியா மாவட்டத்தில் 150 எழுதுவினைஞர் பதவிகளுக்கும், ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியப் பதவிகளுக்கும் வெற்றிடம் நிலவுவதாகவும்பொது நிர்வாகஉள் நாட்டலுவல்கள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றை அடுத்த ஆண்டு முதல் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்டத்திற்கு அரசு அறிவித்த காலத்திற்குள் வேலைக்குத் திரும்பாத வர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வவுனியா மாவட்டத்தில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரம் வடமேல் மாகாணசபை ஆளுநர் நளின் செனிவிரத்தினாவும், வவுனியா அரசாங்க அதிபருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஹெலி கூடு

நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் சுழிபுரம் பகுதியில் ஹெலி ஒன்று திடீரெனக் கலிபர் தாக்கி தலை மேற்கொண்டது 18

பிரதமருக்கு...

பாராளுமன்றில்பேசுகையில் புதிய வரவு செலவுத்திட்டத்தை விஜதுங்க சிறப்பாகச் சமர்ப்பித்துள்ளார். இதனை நல்ல முறையில் அமுல்படுத்த

4000மரக்கன்று விநியோகம்

இளவாலை - முள்ளாவை கலைவாணி சனசமூக நிலையம் மாவீரர் நினைவு வாரத்தை முன்னிட்டு 4000 மரக்கன்றுகளை பொது நிறுவனங்களுக்கும் சன சமூக நிலையங்களுக்கும் இலவசமாக விநியோகம் செய்துள்ளது 13

வாகன உரிமையாளருக்கு

வடபகுதிக்கு வெளியேசெல்லும் வாகனங்கள் வவுனியா

மாலை...

விட்டனவோ எனும் பிரமையைத் தோற்றுவிக்கும் வகையில் இவ்வாரத்தில் மக்களிடையே மாவீரர் நினைவாக சொகம் இழையோடினும் மண்ணின் மைந்தர்களுக்கான அஞ்சலியில் மக்கள் மிகவும் பெரும் ஈடுபாடைக் காட்டியதனை அவதானிக்க முடிந்தது

கண்டியில்

கண்டியில் உள்ள இவ்வலுவலகத்தை மூடவேண்டாம் எனப்பல கோரிக்கைகள் விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெருந்தலைவன்...

சம் இலட்சமாகவும் எம்மையே அழிக்கத் தயாராக உள்ளோம் எமது அணியில் இணைய விரும்புவோர் எந்நேரத்திலும் வந்து இணையலாம் என்றார்.

நள்ளிரவு புகைக்குண்டுகள்

மாவீரர் தினமான நேற்று முன்தினம் இரவு 12மணிக்குச் சுடர் விளக்குகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கையில் வடமராட்சி மாவீரர் மயானத்திலும், தென்மராட்சி மாவீரர் மயானத்திலும் 10க்கு மேற்பட்ட புகைக்குண்டுகள் ஆகாயத்தில் பறக்கவிடப்பட்டது ஒளி பிரகாசமாய்க் காட்சியளித்தன

புகைக்குண்டுகளை வெடித்தவர்களை நெடியகாடு விளையாட்டுக் கழக இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். நேற்று மாலை 6 மணிக்கு யாழ்நிபாணத்திலும் புகைக்குண்டுகள் பறக்கவிடப்பட்டன. 07

கோழும்பு பத்திரிகையாளர் சம்பள அதிகரிப்புக் கோரல்

இணைய விரும்புவோர் எந்த நேரத்திலும் வந்து இணையலாம் என்றார்.

மாவீரர்...

குமார் மாவீரர் தேசிய விழா வில் பேசுகையில் கூறினார்.

சுயகௌரவத்தை உணர்ந்து தேசிய விடுதலைக்குரிய இன மாக மாற்றியமைக்கும் வித மாக உங்களுக்கு தேசியத் திருநாளை ஆக்கித்தந்திருக் கிறோம் தனிமனித கௌரவ, வரட்டு நிகழ்வு களோடு மாவீரர்கள் நினைவு அமையக்கூடாது.

போராட்டம் என்று கூறி னால் வறுமை, சோதனை அபாயம் என்பன இருக்கும். இரண்டையும் இரண்டுக்கும் களாக சமாந்தரமாகப் பார்க்க வேண்டும் என்றார்.

நேற்று...

முன்னணித்தலைவர் திரு கோ மகேந்திரராஜா, கடற்படை தளபதி திருசூசை, யாழ்வேட தளபதி நிரு தமிழ்ச்செல்வன் ஆகியோர் ஏற்றுக்கொண்ட னர்.

திரு மகேந்திரராஜா தேசி யக் கொடியை இறக்கியதுடன் தேசிய விழா நிகழ்ச்சி பூர்த்தி யானது. 7

பாராளுமன்றத்தெரிவுக்குழு 'புதிய வரவு செலவுத்திட் டத்தை' ஜனநாயக சிறப்பாகச் சமர்ப்பித்துள்ளார். இதனை நல்ல முறையில் அமுல்படுத்த முடியும் 'என்றும் அத்துலத் முதலி கூறினார்.

அவர் இவ்விதம் ஐ. தே. த. அரசின் உயர்; தலைவர் ஒரு வரை பாராளுமன்றத்தில் பாராட்டியுள்ளது கவனத்தை ஈர்க்கும் ஓர் அம்சமென அரசி யல் அவதானிகள் கூறுகின்ற னர்.

இராணுவ—

முன்னாள் வடகிழக்கு மாகாண சபையின் பிரமுக ரான இவர் கொழும்பிற்கு இடைப்பிரச்சினை தொடர் பான மாநாட்டில் பேசுகை யிலேயே இவ்வாறு தெரிவித் தார்

இனப்பிரச்சினை தீர்வுக்கு மக்கள் தொடர்பு சாதனங் கள் பொதுமக்கள் கருத்தை நிரப்ப தவறிவிட்டன எனக் குறிப்பிட்ட தயான் ஜெய திலக்க, புலிகளை தோற் கடிப்பதன் மூலம் இனப்பிரச் சினையை தீர்க்க முடியாது யுத்தத்தை நடாத்த செல வாகும் பணத்தை அபிவிருத் திக்கு பயன்படுத்தலாம் என் றார்

வாகன உரிமையாளருக்கு

வடபகுதிக்கு வெளியேசெல் லும் வாகனங்கள் வவுனியா தடைமுகாமில் வைத்து பதிவு செய்யப்படுகின்றன. அதே வேளை வடக்கிற்கு வெளியே செல்லும் வாகன உரிமையா ளர்கள் தங்களின் வாகனங் களை, பதிவு செய்வதற்கான படிவங்களை ஆயிரம் ரூபா செலுத்தி கோண்டாவில் அலு வலகத்திலும் பெற்றுக்கொள் ளலாம் என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு வாகன உரிமையாளர்களிற்கு தெரி யப்படுத்துகின்றது.

அத்தோடும் 01. 12. 91 தொடக்கம்) எம்மிடம் பதிவு செய்த வாகனங்களிற்கே வடக்கிற்கு வெளியே செல்ல அனுமதி வழங்கப்படும் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரவு—

கரையோரப் பகுதிகளை நோக்கிப்பலத்த பீரங்கி தாக் குதல் மேற்கொள்ளப்பட் டது.

இதேவேளை மாங்கிட்டபுரம் தச்சன் காடு பகுதியிலிருந்து ஊர்காவற்துறை நோக்கி 'ஷெல்'கள் ஏவப்பட்டன.

கொக்குளாய் கலட்டிப்பகுதி யில் இரவு வீழ்ந்து வெடித் துள்ளதாக அறிய வருகின் றது. 13

கோழும்பு பத்திரிகையாளர் சம்பள அதிகரிப்புக் கோரல்

லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் அதன் பத்திரிகை யாளர்களுக்கு வழங்கும் சம் பளத்தைப் போல வே கொழும்பில் உள்ள முன்னணி பத்திரிகை நிறுவனங் களும் தமது பத்திரிகையா ளர்களுக்கு வழங்க வேண்டும் என இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள் ளது.

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் பத்திரிகையாளராகச் சேரும் ஒருவருக்கு 2650 ரூபா ஆரம் பத்தில் மாதாந்த அடிப் படைச் சம்பளமாக வழங் கப்படுகிறது.

இது தவிர ஆயிரம் ரூபா வுக்கு மேல் மாதாந்தம் வாழ்க்கைச் செலவுப் படியா வும் வழங்கப்படுகிறது.

பாடத்திட்டம்; மாற்றம் ஏற்பட்டாலே ஏற்றம்

பல்கலைக்கழகங்களிற் தற் பொழுது நடைமுறையி லுள்ளபாடத்திட்டங்கள் தரு நியற்றவையெனப் பல்கலைக் கழக மாணிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் அலு விகார கூறியுள்ளார்

மாவீரரின்...

திருமலை - மட்டக்களப்பு மாவீரர்களின் பெற்றோர் க ளும்நிகழ்ச்சிகளிற்கலந்து சுடர் ஏற்றினர்.

நேற்று முன்தினம் யாழ் பரி யோவான் கல்லூரியில் மாவீ ரர்களின் பெற்றோர்கள் விடு தலைப்புலிகளினால் கௌர விக்கப்பட்டனர். 67

பேராதனைப் பல்கலைக் கழக வைபவமொன்றில் பேசிய அவர், "இத்தகைய பாடத்திட்டங்கள் நாட்டின் தேவைக்கேற்ப அமைய வில்லை என்றும் அப்படி அமைந்திருப்பின் படித்த பட் டதாரிகள் வேலையின்றி அலையவேண்டிய நிலை ஏற் பட்டிருக்காதென்றும் இத னால் இந்தப் பாடத்திட்டத் தில் மாற்றங்கள் வேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

வீரமரணம்...

பதிவும் தயானந்தன் (மண்டூர் மட்டக்களப்பு) நேற்று வீர மரணமடைந்தார்.

நடவடிக்கைகள் காரண மாகத் தமிழ் மக்கள் மத்தி யில் ஏற்பட்ட அசௌகரி யத்திற்காக அந்த வகையில் இராணுவத்தையும் நாம் வேறு அவர்களை விரக்தியடைத்தோம்.

சரித்திர உண்மை

எமது போராட்டம் அன்று முதல் இன்றுவரை ஒருபுறம் நெருக்குதல்களையும், மறு புறம் இயக்கங்களையும் கண்டு உறுதி பெற்று வளர்ச் சியடைந்தது. தற்போதைய நெருக்குதல்களும் எமக்கு வெற்றியையே தரும். இது சரித்திரம் கண்ட உண்மை. இராணுவ அச்சுறுத்தல் உளவு நெருக்கடி முதலான வற்றை ஏற்படுத்தி எம்மை கட்டுப்படுத்தலாம் என்று அரசு கனவு காணுகிறது

இத்தகைய கருத்துக்கள் மனம் தளராது பேச்சு வார்த்தை என்ற பூச்சாண்டி மீது நாட்டம் கொள்ளாமல் இத்தகைய உடைக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற் சிகளைத் தமிழ் ஈழ மக்கள் மேற்கொண்டு வருகின்றார் கள். பேச்சுவார்த்தைகளும் நாம் தயார் ஆனால் சண் டையா? சமாதானமா? பேச் சுவார்த்தை மூலம் பிரச்சினை களைத் தீர்வுக்குக் கொண்டு வரலாமா என்பதனை எமது எதிரிதான் தீர்மானிக்கவேண் டும் என்றார். (25 07)

* இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவன நிரார்யாழ் கல்வியங்காடு டச்வீதி 'லக்ஷ்மி பிக்ஸ்'சில் உள்ளஅச்சகத் தில் 25. 1. 1991 ஆம் திகதியன்று வெளியிடப்பெற்றது